Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 21-1-1985 திங்கட்கிழமை (ரக்தாக்ஷி தை 8) முழக்கம் 180

## திருமலை பொலிஸ் நிலையத்துள் இரண்டு துப்பாக்கி வேட்டு!

(திருமலை)

திருமலை பொலிஸ் நிலைய வளவுக்குள்ளிருந்து நேற்று மாலை பொழுது சாயும் வேளையில் திடீரென அடுத்தடுத்துக் கேட்ட இரண்டு துப்பாக்கி வேட்டுச் சத்தத்தினால் நகரம் பெரும் பதற்றத்துக்குள்ளானது வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. வீடுகளில் வெளிச்சம் அணைக்கப்பட்டன முதலாவது வேட்டு தற்செயலாக துப்பாக்கி வெடித்ததால் ஏற்பட்டதாம் இரண்டாவது வேட்டுப் பற்றி தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இச் சம்பவங்களையடுத்து பொலிஸ் நிலைய வெளிப்பகுதியில் காவலுக்கு நின்ற அனைத்துப் பொலிஸாரும் உள்ளே அழைக்கப்பட்டனர். உயிர்ச்சேதம் பற்றி எதுவும் தெரியவரவில்லை.

★ முறிகண்டிச் சம்பவம்: இராணுவத் தளபதி நேரில் பார்வையிட்டார்!

# யாழ்தேவி குண்டு வெடிப்பில் 26 ராணுவவீரர் ஸ்தலத்தில் பலி!

## மரணமானோர் தொகை 41? படுகாயம் 34 பேர்!

### மேலும் பல சடலங்கள் ரயில் பெட்டிக்குள் சிக்குண்டுள்ளன; ஐவர் நிலை கவலைக்கிடம்!

(முறிகண்டியிலிருந்து எமது விசேஷ நிருபர்)

முறிகண்டிக்கும் மாங்குளத்துக்குமிடையே, 194ம் கட்டையில் நேற்று முன்தினமிரவு யாழ்தேவி ரயில் கண்ணிவெடி விபத்தில் சிக்கியதால் கொல்லப்பட்ட மொத்தம் இருபத்தாறு இராணுவ வீரர்களின் சடலங்கள் கடந்த நள்ளிரவு வரை மீட்கப்பட்டுள்ளன. மேலும் பல ராணுவத்தினரின் சடலங்கள் தடம்புரண்டு சிதறிக் கிடக்கும் ரயில் பெட்டிகளுக்குள் சிக்குண்டு கிடக்கலாமென்ற அச்சத்தினால், மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பதினொரு தமிழ் பிரயாணிகளும் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஐவர் மட்டுமே அடையாளம் காணபபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தினால் சுமார் நாற்பத்தொருபேர் மரணமாகியிருக்கலாமென்று கணக்கிடப்பட்டுள்ளதாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்த 34 பேர் அனுரதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் மூவர் பொலிஸார். படுகாயமடைந்து கவலைக்கிடமான நிலையிலிருந்த ஐந்து ராணுவ வீரர்கள் நேற்று விசேஷ விமானம் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க உயர் அதிகாரிகள் சகிதம் ஸ்தலத்துக்கு விஜயம் செய்து சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார் அனுரதபுரத்திலிருந்து விசேஷ ரயில் மூலம் கொண்டு வரப்பட்ட 'பாரம் தூக்கி' யின் உதவியுடன் இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்தின தலைமையில் மீட்புவேலைகள் நடைபெறுகின்றன.

யாழ்தேவியின் என்ஜினுடன் இணைக்கப்பட்டிருந்த முதல் இரு பெட்டிகளைத் தவிர மிகுதிப் பன்னிரண்டு பெட்டிகளும்

—4-ம் பக்கம் பார்க்க

**நன்றி! நன்றி!**

யாழ்தேவி ரயில் நேற்று முன்தினம் இரவு முறிகண்டியில் கண்ணிவெடி விபத்தில் சிக்கிய செய்தியை 'ஈழமுரசு' நேற்றே வெளியிட்டிருந்தது. செய்தியை முந்தத் தந்த ஈழமுரசின் துரித செய்திப் பணியைப் பெரும்தொகையான வாசக அன்பர்கள் நேரிலும், தொலைபேசியிலும் பாராட்டினார்கள். அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகள்!

### புகையிரதப் பகுதி ஊழியர் மூவரும் விபத்தில் மரணம்

(கொழும்பு)

யாழ்தேவி குண்டுவெடிப்புச் சம்பவத்தில் புகையிரதப் பகுதி ஊழியர்கள் மூவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மரணமானவர்களின் உறவினர்களுக்குத் தகவல் கொடுக்கும் நடவடிக்கைகளை புகையிரத தலைமை அலுவலகம் நேறறு மாலை மேற்கொண்டது

புகையிரத இலகா கொழும்பு அலுவலக கணக்காளர் இரத்தினம் என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானார். இவர் நெல்லியடி மகாத்மா தியேட்டர் ஒழுங்கையைச் சேர்ந்தவர்.

இரத்மலானை புகையிரத பிரதம பொறியியலாளர் அலுவலக தொழில்நுட்ப உத்தியோகஸ்தரான வி. இராஜதுரையும் மரணமாகியுள்ளார். இவர் சங்கானையில் மல்லாகம் வீதியில் வசிபபவர்.

மூன்றாவது நபரான நாகேஸ்வரன் மாங்குளம் புகையிரதப்பகுதியில் கடமையாற்றுபவர். கல்வியங்காடு மூலரும் கட்டையைச் சேர்ந்தவர் இவர்.

### 'கை' மாறும் கைக்கடிகாரம்

பிரயாணிகள் செல்வதற்கான பாஸ் இல்லாத மினி வான்களைத் தடுத்து நிறுத்திச் சோதனை நடத்தும் சீருடையினர் சாரதிகள் அணிந்திருக்

—4-ம் பக்கம் பார்க்க

சென்னையில் அமிர்தலிங்கம் அறிவிப்பு :

## சிங்களவர் குடியேற்றம் தமிழர் இறுதி மூச்சுவரை எதிர்த்துப் போராட்டம் நடத்துவர்!

(சென்னை)

"முப்பதாயிரம் சிங்களக் குடும்பங்களை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியமர்த்துவது என்ற அரசின் திட்டத்தை இலங்கைத் தமிழர்கள் இறுதி மூச்சுவரை எதிர்த்தே தீருவர்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் உறுதியாகத் தெரிவித்தார்.

'அரசின் இக் குடியேற்றத் திட்டம் பிரச்சினைகளை மேலும் மோசமாக்க வ உதவும் இதனால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தமிழ் தீவிரவாதிகளை ஒடுக்குவதென்ற பெயரில் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தை எதிர்த்து தமிழர்கள் இறுதி மூச்சுவரை போராடுவர். இத்தகைய நிலை ஒற்றுமைக்கு எதிரானது என்று ஆட்சி நடத்திய பல அரசாங்கங்கள் கருத்துக் கொண்டிருந்தன" இனக்கலவரங்களுக்கே இந்நிலை வித்திடும். திட்டமிட்ட குடியமர்த்தலாலேயே தமிழீழக் கோரிக்கையே எழுந்தது. என்றும் அவர் சொன்னார்.

திட்டமிட்ட குடியமர்த்தல் நடைபெறாது என ஐக்கிய தேசியக் கட்சி தனது 1947ம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே கூறியிருந்தது. குடியேற்றம் தொடர்பான குறைபாடுகள் களையப்படும் என்றும், இந்நிலை மாற்றப்

—4-ம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி பாதை பஸ்கள் இன்று வழக்கம்போல ஓடும்

(கிளிநொச்சி)

பரந்தன் உமையாள்புரம் பாதையில் நேற்று முன்தினம் கண்ணிவெடி வெடித்ததால் ஏற்பட்ட பாரிய குழிகள் நேற்று இளைஞர்களினாலும், பொதுமக்களினாலும் மண், கல் ஆகியன போடபபட்டு நிரப்பப்பட்டன.

—4-ம் பக்கம் பார்க்க

### சூட்டுக்காயத்துடன் ஐவர் யாழ். ஆஸ்பத்திரி வந்தனர்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுககு இலக்காகி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டிருந்த ஐவர் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

துணுக்காயைச் சேர்ந்த பொன்னுத்துரை (40), கிளிநொச்சியைச் சேர்ந்த சுந்தரம் (16), புலோலியைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் (40), புங்குடுதீவைச் சேர்ந்த குமாரசாமி (61), கிளிநொச்சியைச்

—4-ம் பககம் பார்க்க

### மின்கம்பத்தில் 'பணம்'

யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள வசிகசாலை மின்கம்பத்தில் நேற்று 'பணம்' என

—4-ம் பக்கம் பார்க்க

### பாதுகாப்பு சபை கூடியது

தேசிய பாதுகாப்புக் கவுன்ஸில் நேற்று மாலை அவசர அவசரமாகக் கூடி யாழ்தேவி குண்டு வெடிப்புச் சமபவம் சம்பந்தமாக ஆராய்ந்தது.

### ரயில் ஓடவில்லை

வட பகுதிக்கான ரயில் சேவை நேற்று நடைபெறவில்லை. இச்சேவை இன்று நடைபெறுமா என்பது பற்றி எந்த அறிவிப்பும் புகையிரதப் பகுதியால் விடுக்கப்படவில்லை.

அத்துலத்முதலி அறிவிப்பு :

### வெளிநாட்டுப் படைகளை எதிர் கொள்ளத் தயார்!

எந்த வெளிநாட்டுப் படையையும் எதிர்கொள்வதற்கு மக்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்படும். ஆயுதப்படைகளின பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளின் போது இயன்றவரை மக்களுக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே அரசின் நோக்க

—4-ம் பக்கம் பார்க்க

### பூஸா முகாமிலிருந்து வந்த 25 இளைஞர்கள் விபரம்

பூஸா ராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் விடுதலை பெற்று, யாழ்தேவி ரயில் மூலம் வந்து ஆனையிறவு தடை முகாமில் சனிக்கிழமை இரவு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இருபத்தைந்து இளைஞர்களும் நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக விசேஷ பஸ்

—4-ம் பக்கம் பார்க்க

★ மற்றொரு கடிதம்

## மந்திகை மரணதண்டனை நியாயமானதா?

புலோலி தெற்கு கே. யு. கண்ணன் (ஊரு) என்பவர் ஈழமுரசுக்கு எழுதியுள்ள ஒரு கடிதம் கீழே முழுமையாகத் தரப்படுகின்றது.

மந்திகையில் கடந்த திஞோராந்திகதி சித்த சுயாதீனமற்ற அனாதை ஒருவர் இளைஞர் சிலரால் சித்திரவதை செய்யப்பட்டு இயேசு நாதர் பாணியில் கொலை செய்யப்பட்டுள்ளார். ஊர் மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட விநாசித்தம்பி என்பவரே குடும்பப் பகைவர்களால் பிடிக்கப்பட்டு சயிற்றுல் கை, கால் பிணைக்கப்பட்ட நிலையில் வதியில் இரத்தம் ஒழுக இழுத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் சனநடமாட்டமில்லாத ஓர் இடத்தில் கட்டப்பட்டார். காலையிலிருந்து மாலை வரை தாக்கப்பட்டார். கொதிக்கும் வெயிலில் இவர் ''அம்மா தண்ணி'' எனக் கதறி அழுத போதும் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. காலையிலிருந்து தொடர்ந்து தாக்கப்பட்டதால் அந்தி மயங்க இவரும் மயங்கிவிட்டார். இரவு நேரம் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்யப்பட்டு ஒரு மரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கக் காணப்பட்டார்.

இவர் உறவினர்கள் இவரைக் காப்பாற்றுமல் தடுப்பதற்காகக் கொலைகாராகள் இரண்டு நபர்களை இவரின் சகோதரி வீட்டுக்கு அனுப்பி ''நாம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். உங்கள் சகோதரனை நீ காப்பாற்ற முனைந்தால் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவோம்'' எனவும் எச்சரித்தனராம். இதனுல் அவர்கள் காப்பாற்ற முன்வரவில்லை.

இயக்கப்பெடியள் விநாசித்தம்பியைக் கொலை செய்துவிட்டார்களென இக் கொலைகாரர்களே வதந்திகளைப் பரப்பியிருக்கிறுர்கள். அப்பாவி அநாதைகளுக்கு முடிவு இதுதானு? இயக்கங்கள் நித்திரையா? என மக்கள் ஏக்கத்துடன் கேட்கின்றுர்கள். அன்றியும் சிலர் இக் கொலைக்கு இன்னமும் இயக்கந்தான் பொறுப்பு என நம்பிக்கொண்டிருக்கின்றனர்

## பலாலியிலுள்ள 64 இளைஞர் நேற்றைய மிகுதிப் பெயர்கள்

இம் மாதம் 16-ம 17-ம் திகதிகளில் கைதாகி பலாலியில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படும் 64 இளைஞர்களின் பெயர்களின் ஒருபகுதி நேற்றுப் பிரசுரமானது, மிகுதிப் பெயர்கள் கீழே பிரசுரமாகின்றன. சி. யோகேஸ்வரன் (பலாலி மத்தி) கு. சகாயதாஸ் (பலாலி வடக்கு) மு. முருகேசு (தெல்லிப்பிட்டி) து. தம்பிப்பிள்ளை (பலாலி கிழக்கு) இ. துரைராஜா (பலாலி கிழக்கு) மு. சிவனேஸ்வரன் (பலாலி மத்தி) இருதயநாதன் (பலாலி வடக்கு) கி. ஐயாத்துரை (பலாலி மத்தி) அ ஆசீர்வாதம் (பலாலி கிழக்கு) இ பற்குணம் (நீர்வேலி வடக்கு) வி. ஜெயகுமாரன் (பலாலி) இ. மகாலிங்கம் (பலாலி கிழக்கு) இ. பரஞ்சோதிலிங்கம் (பலாலி கிழக்கு) ந. ஜெயக்குமார் (பலாலி மத்தி) வி. கிறிஸ்டி (பலாலி வடக்கு) சிவசுப்பிரமணியம் (பலாலி கிழக்கு) சி தர்மசீலன் (பலாலி கிழக்கு) ஜே மா ஞானதாஸ் (பலாலி) வா ஜேசுதாஸ் (பலாலி வடக்கு) யா மரியாகொஸ்ரின் (பலாலி வடக்கு) இ. இராசரெத்தினம் (பலாலி வடக்கு) சு கலியுகவரதன் (பலாலி மத்தி) இ விஜயராஜன் (பலாலி வடக்கு)

## ஆலயத்தில் திருட்டு

(ஊரெழு)

ஊரெழு அருள்மிகு ஸ்ரீமீனுட்சி அம்பாள் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பல பொருட்கள் திருட்டுப் போயுள்ளன. திருட்டுப் போன பொருட்களின் பெறுமதி சுமார் மூவாயிரம் ரூபா அளவில் இருக்கலாம் என சொல்லப்படுகின்றது,

வசந்த மண்டபத்தின் மேற்கூரை வழியாக உள்ளே நுழைந்தவர்கள் இத்திருட்டைச் செய்துள்ளனர், குடங்கள், குத்துவிளக்குகள் என்பன திருட்டுப்போன பெறுமதியான பொருட்களிலடங்குகின்றன




✵ கொட்டடி செல்வநாயகம் சுபாஷினி தம்பதிகளின் மகள் சுதர்ஷினி இன்று தனது மூன்றுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✵ பருத்தித்துறை, ஓடக்கரை லோகநாதன் ஈஸ்வரியம்மாள் தம்பதிகளின் மகள் ரதிதேவி இன்று தனது ஆருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்

✵ நல்லூர், இரத்தினம் சுபத்திராதேவி தம்பதிகளின் மகள் கௌசலா இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✵ சுங்கத்தானை, லட்சுமிகாந்தம்ஐயர் காயத்திரிதேவி தம்பதிகளின் மகன் தேஜோமயன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✵ கைதடி குலேந்திரன் ஈஸ்வரி தம்பதிகளின் மகன் மேகலன் இன்று தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறுர்.

✵ கச்சேரி புகையிரதவீதி சண்முகநாதன் பாக்கியேஸ்வரி தம்பதிகளின் மகள் ரேணுகா இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

## இலங்கை இந்து மக்களின் சார்பாக ராஜீவுக்கு தந்தி

உலகின் முதன்மையான இந்து நாட்டின் தலைவராக தாங்கள் வெற்றியீட்டியதற்கு இலங்கை இந்துக்கள் வாழ்த்துகிறுர்கள்'' என்று யாழ் இந்து இளைஞர் மன்றத் தலைவர் சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராசா பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு பாராட்டு தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அத்தந்தியில். இலங்கையில் இந்து, பௌத்த மதங்களுக்கும், தமிழுக்கும், சிங்களத்துக்குப் சம உரிமையளித்து இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள். இலங்கை ஆயுதப் டையினரின் காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் நடவடிக்கை எடுங்கள்'' என்றும் திரு ராஜராஜேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

## கிழங்கு திருடும் கசிப்பு மன்னர்

(மானிப்பாய்)

பாலாவோடையிலுள்ள தோட்டமொன்றில் செய்கை பண்ணப்பட்ட உருளைக் கிழங்குப் பயிரின் தாய்க் கிழங்குகளை கசிப்புக் காய்ச்சுவதற்காக யாரோ இரவோடிரவாக கிளறி திருடிச் சென்றுள்ளதால் மூவாயிரம் ரூபாவிற்கு மேல் நட்டமடைந்த அத்தோட்டக்காரர் மிக வேதனையடைந்துள்ளார். இச்சம்பவத்தையடுத்து மற்றைய தோட்டக்காரர்கள் தங்கள் தோட்டங்களில் இரவு பகலாக காவலிருக்கின்றனர்.

### கல்வி

டிப்ளோமா பயிற்சியும் 9 வருட அனுபவமும் பெற்ற பிரபல ஆசிரியையினுல் புதிய முறையில் நடத்தப்படும் பாலர் பாடசாலையில பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவோர் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர், உயர்கலைக் கல்லூரி,
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### ஏல விற்பனை

எப்பொருளானுலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் பொதுச்சந்தை, கோப்பாய்

### கல்வி (இடமாற்றம்)

பருத்தித்துறை Y.M.C.A. கல்விக் கழகம் இடமாற்றஞ் செய்யப்பட்டு பாலர் பாடசாலை உட்பட ஆத்தியடி தபாலகத்திற்கு முன்னுலுள்ள கட்டிடத்தில் ஒழுங்காக இயங்கிக்கொண்டிருக்கின்றது. 5—12-ம் வகுப்பு விண்ணப்பங்கள் 31-1-85 முடிய ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப்படிவங்களைக் காரியாலயத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குநர்
மெதடிஸ்த திருச்சபைக்காக

### விற்பனைக்கு

SHARP SF 721 SHARP FAX போட்டோஸ்ரற் மெசின் HONDA GENERATOR EGK 1000 கொண்டா மண்எண்ணை ஜெனரேற்றர் — இரண்டு கதவு பிலிப்ஸ் குளிர் சாதனப்பெட்டி — SUMEET DOMESTIC MIXER சுமிற் மிக்ஸ்சர் — AEG 500 WATT ELECTRONIC DRILLING MACHINE — றில்லிங் மெசின் மரம் அரியு மெசின் — சீவுளி மற்றும் பலவித உபகரணங்கள் வாருங்கள்

ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

**EUROLANKA TRAVELS LTD.**

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் எமது ஸ்தாபனம் யாழ்நகர் மக்களின் வசதிக்காக இப்பொது யாழ்நகரிலும் எமது கிளையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

BERLIN (பேர்லின்) மறறும் உலகின் எல்லாப் பாகங்களிற்கும் மற்றெல்லா ஸ்தாபனங்களையும் விட மிகக் குறைந்த விலையில் விமான டிக்கட்டுகளை யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ளுங்கள்.

BERLIN ஒற்கு ''AIR LANKA'' சேவயில் 14.800 மட்டுமே (வியன்னு வழியாக)
AEROFLOT சேவையில 13,200 மட்டுமே (மொஸ்கோ வழியாக)

எமது சேவையின் விபரங்கள்:-

1. பாஸ்போட் BOND செய்து தருவதற்கான வசதிகள்
2. பிரயாணக் காசோலைகள் (Traveller's Cheque) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை
3. கொழும்பிலிருந்து விமான நிலயம் வரைக்கும் போக்குவரத்து வசதிகள்.

குறிப்பு:- கமிஷன் அடிபபடையில் வேலை செய்யக்கூடிய கன்வஸர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

மேலும் விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:

EUROLANKA TRAVELS Ltd.
40, 3rd Cross Street, JAFFNA.

தலைமை அலுவலகம்:-
EUROLANKA TRAVELS Ltd.
6A, Daisy Villa Avenue, COLOMBO - 4
தொலைபேசி:- 585990, 589992

கிளை:-
EUROLANKA TRAVELS Ltd.
8th Floor, Paul vi Centre, Front Street, COLOMBO - 11
தொலைபேசி: 549495

G.C.E. O/L வகுப்புக்கள்
பெண்களுக்கான க. பொ. த.
சாதாரண வகுப்புக்கள்
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் ஆரம்பமாகியுள்ளன
அத்துடன்
சனி, ஞாயிறு, தினங்களில்
நடனம், வீணை, வயலின், கிற்றர்
வகுப்புக்களும் நடைபெறுகின்றன
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
நிர்வாகி
வின் இன்லேடீஸ் அக்கடமி
61/1, பருத்தித்துறை வீதி;
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்
30-01-85 வரை

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு

21—1—1985 3

# பாக். எதிர்க்கட்சிகள் கூட்டம் நடத்த அரசு தடையுத்தரவு

(கராச்சி)

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் அதனை பகிஷ்கரிப்பதெனப் பாகிஸ்தானின் பதினொரு எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாக நேற்று வெளியான அறிக்கைகள் தெரிவித்தன இஸ்லாமிய அரசு ஒன்றினைத் தோற்றுவிக்கும் வகையில் பொதுத்தேர்தல் பாரபட்சமற்ற முறையில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் — ஹக் அறிவித்திருந்தார்.

பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பானது இராணுவ ஆட்சியைத் தொடர்ந்தும் நீடிக்கும் ஓர் சூழ்ச்சி நடவடிக்கையே என்று பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் வாணித்துள்ளன. பாகிஸ்தான் இராணுவ அரசு பல முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளதும் எதிர்க்கட்சிகளின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது

இராணுவ அரசுக்கெதிரான ஒத்துழையாமை இயக்கமும் எதிர்க்கட்சிகளால் பரவலாக நடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

பிந்திய செய்தி:

பாக்கிஸ்தானில் எதிர் கட்சிகள் கூட்டம் நடத்துவதற்கு அரசு தடைவிதித்துள்ளது.

உதய சிந்தனை

ஜனநாயக ஆட்சி என்பது பலாத்காரம் அனுவளவும் கலவாத அஹிம்சா ஆட்சியேயாகும்.

—மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

21-1-85 திங்கட்கிழமை (இரத்தாக்ஷி தை 8)

## ஐந்தாம் படை உருவாகின்றது!

சின்னஞ்சிறு தீவான இலங்கை பல்வேறு இன, மத, மக்களையும் கொண்டது.

இந்தத் தீவின் பூர்வீக குடிகள் யார் என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுதான் இன்றைய இனப்பிரச்சினையின் மூலவேர்.

தமிழரும், சிங்களவரும் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பது இரு பகுதியினரும் ஒப்புக்கொண்ட உண்மை

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகும். 1947ம் ஆண்டின் ஐக்கிய தேசியக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனமும், 1960ம் ஆண்டின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனமும் இதனைப் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளன.

ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் காங்கிரஸ் கட்சி ஐம்பதுக்கு ஐம்பது கேட்டபோது, எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சி கோரியது.

அப்போது தனித் தமிழ் நாடு என்ற ஒன்றையோ, அல்லது தமிழீழம் என்ற ஒன்றையோ ஈழத்தமிழர்கள் கேட்கவில்லை.

தமிழ்நாடு உருவாக்கப்பட வேண்டுமென்று 1974க்கு முதல் கோரியவர்கள் மூவர். வவுனியா சி சுந்தரலிங்கம், ஊர்காவற்றுறை வி. நவரத்தினம், காங்கேசன்துறை பாரிஸ்டர் அம்பலவாணர் ஆகியோர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளுக்கு எதிராகப் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியவர்கள்.

அன்று தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்பதையும், ஒற்றையாட்சியினையே விரும்பி வந்தனர் என்பதையும் நினைவூட்ட இதுவே சரியான உதாரணமாகும்.

1974க்குப் பின்னர் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு ஸ்ரீமாவோ அம்மையார் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட 'தரப்படுத்தலே' உண்மையான காரணம்.

அன்று ஆரம்பமான இளைஞர் பிரச்சினை, இன்று இனப் பிரச்சினையாக மாறி அரசின் பார்வையில் பயங்கரவாதப் பிரச்சினையாகத் தென்படுகின்றது.

இந்த நோயைக் குணப்படுத்த எத்தனையோ வைத்தியங்கள் செய்யப்பட்டு அனைவருமே களைத்துவிட்டனர். நோயைத் தெரிந்தும் சரியான மருந்தை வழங்க வராத வைத்தியர்களால் தான் நோய் அதிகரித்துக் கொண்டு போவதை முன்பும் பல தடவை சுட்டிக்காட்டியுள்ளோம்.

தமிழரின் பாரம்பரிய பிரதேசமான வட, கிழக்கில் முப்பதாயிரம் சிங்கள மக்களைக் குடியேற்றும் "புதிய மருந்தொன்றை" அமைச்சர் லலித் அத்துலத்முதலி கண்டு பிடித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஒரு சமூகத்தவர் மட்டும் வாழும் பிரதேசமாகத் தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கமாட்டேன் என்று அவர் சூளுரைத்துள்ளார்.

இவ்வாறு குடியேற்றப்படும் சிங்கள மக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி, துப்பாக்கிகளும் கொடுக்கப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

விளக்கமாகச் சொன்னால், இங்கு வாழும் நிராயுதபாணிகளான தமிழர்களுடன் போராட, ஆயுதபாணிகளான சிங்கள மக்கள் அனுப்பப்படப் போகின்றார்கள் என்பதே சரி.

ஏற்கனவே அரச நிர்வாகத்திலுள்ள இராணுவ, கடற்படை, ஆகாயப் படை, பொலிஸ் படை என்னும் நான்கு படைகளுடன் "ஐந்தாம் படை"யாக சிங்கள மக்கள் வடக்கே அனுப்பப்படப் போகின்றார்கள் என்றும் இதனை எடுத்துக்கொள்ளலாம்.

நெருப்புடன் நடத்தப் போகும் விளையாட்டொன்றுக்கு பொது மக்களை இரையாக்கும் இத்திட்டத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

"ஒவ்வொரு தமிழனும் இறுதிமூச்சு வரை இதனை எதிர்த்துப் போராடுவான்" என்று கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் சென்னையிலிருந்து அறிவித்துள்ளார்.

அப்பாவித்தமிழர் ஆயுதப்படையினரால் அநியாயமாகக் கொன்று குவிக்கப்படுகின்றார்கள் என்ற அவலக்குரல்களை அழித்து ஒழிக்க "ஐந்தாம்படை" யொன்றை உருவாக்குவதும், அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதும், அரசாங்கம் தற்கொலை செய்ய முயற்சிப்பதற்கு ஒப்பானதென்று தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

தமிழ்ப் பகுதிகளை யுத்த பூமியாக்கி, இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓட விடுவதால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா?

கௌரவ அமைச்சர் லலித் அத்துலத்முதலி, தனது முடிவை மீளப்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்!

## மாதர் சரிசம நிலை பெற்றால் மட்டுமே சமூகநீதி மலரும்

### தமிழக கல்விமந்திரி கருத்து

(மதுரை)

"மாதர்க்கு சமூகத்தில ஆண்களுக்கு உள்ளது போல் சரிசம நிலையளிக்காவிட்டால் உண்மையான சமூக நீதி உள்ளது என்று கூறமுடியாது" இவ்வாறு தமிழ் நாடு கல்வியமைச்சர் திரு. சி. அரங்கநாயகம் நேற்று மதுரையில் நடை பெற்ற மகளிர் மாநாட்டில் பேசுகையில் சொன்னார்.

"பெண்கள் அடக்குமுறை, வன்முறை, துன்புறுத்தலில் இருந்து விடுபட அரசியல் சாசனம் வழிவகுக்கிறது." என்றும் அமைச்சர் கூறினார்.

இம் மாநாட்டில் முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி கிருஷ்ணஐயர் பேசினார்;

## விண்வெளியில் ஆயுதப்போட்டி

(மாஸ்கோ)

"விண்வெளியில் ஆயுதப் போட்டி உருவாகும் நிலையை அமெரிக்கா உண்டாக்கக் கூடாது," என்று சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ தன்னைச் சந்தித்த அமெரிக்க செனட்டரான திரு. பேரி ஹார்ட்டுடனான சந்திப்பின் போது வலியுறுத்தினார்.

"பரஸ்பர நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சம அடிப்படையில் பிரச்சினைகளுக்கான தீர்வு அணுகப்பட வேண்டும் இந்நிலை மூன்றாவது மண்டல நாடுகளுக்குக்கேடாக இருக்கக் கூடாது. இந்த வகையில் ஆக்பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டாலே அமெரிக்க—சோவியத் யூனியன் நட்புறவு வலுப்படமுடியும், வளர முடியும்," என்றும் திரு. குரோமிக்கோ சொன்னார்.

## மாணவர்க்கு ராஜீவ் அறைகூவல்

## இந்தியன் என்ற உணர்வை வேரூன்ற செய்ய வேண்டும்

"இந்தியன் என்ற உணர்வை மக்கள் மனதில் வேரூன்றச் செய்ய மாணவர் சமுதாயம் உழைக்க வேண்டும்." என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்தி நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் மாநில மாணவர் மாநாட்டில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

"வம்பு பேசுதல், வதந்தி பரப்புதல்" சமுதாயத்தை விட்டுவிலக மாணவர் சேவை வேண்டும். இவ்வாண்டு இளைஞர் ஆண்டாகையால் விரைவான முன்னேற்றத்தின் பொருட்டு மாணவர்கள் பணி புரியவேண்டும்" என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## பாரதி உலகக்கவி ஆர். வி. புகழாரம்

(புதுடில்லி)

"பாரதியார் தென்னிந்தியாவில் வாழ்ந்து தமிழில் மட்டுமே கவிபடைத்திருந்தாலும் கூட, அவர் குறுகிய எல்லைகளைக் கடந்த உலகக் கவிஞராக விளங்கினார்" என்று துணை ஜனாதிபதி திரு ஆர். வெங்கட்ராமன்நேற்று புதுடில்லியில் சுப்பரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக் கமிட்டி சார்பில் நடை பெற்ற பாரதி கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் விழாவில் பேசுகையில் கூறினார்.

முழு பாரதத்தின் மொத்த வடிவாகத் திகழ்ந்த பாரதியார் மிகுந்த நாட்டுப் பற்றுடன் தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தார்," என்றும் திரு. வெங்கட்ராமன் சொன்னார்.

## நைரோபியில் மகளிர் சர்வதேச மாநாடு

(புதுடில்லி)

"மகளிர் நலன் கருதி மண்டல சார்பற்ற நாடுகள் இடம் பெறும் மாநாடு ஒன்று ஏப்ரல் மாதத்தில் புதுடில்லியிலும், மற்றோர் மகாநாடு நைரோபியில் சர்வதேச ரீதியிலும் நடைபெறவுள்ளன." என்று மகளிர், சமூக நலத்துறை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரம் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

"மகளிர் நலன் பேணும் நடவடிக்கைகள் எடுக்குமாறு மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்படும். இந்தவகையில் புதிய உத்திகளும் மேற்கொள்ளப்படும்" என்றும் சொன்னார் அவர்.

## ராஜதந்திரி நாடு கடத்தல்

(புதுடில்லி)

இந்தியாவில் வேவுபார்த்த குற்றச்சாட்டின் பேரில் பிரான்ஸ் ராஜதந்திரி ஒருவர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்திவெளியிட்டுள்ளது.

## பலவீன உடல் நிலையைக் கருதி

## இலாகாப் பொறுப்புகள் அற்றே எம்.ஜி.ஆர்.இருப்பார்

(சென்னை)

திரு எம். ஜி. இராமச்சந்திரன் பலவீனமாக இருக்கும் நிலை கருதி, அவர் முதலமைச்சர் பதவியேற்ற பின்னும் அவருக்கு இலாகா பொறுப்புகள் எதுவும் இருக்காது என்று நேற்று சென்னையில் தெரிவிக்கப்பட்டது. அவர் பெப்ரவரி மாதம் 2ம்திகதி புதுடில்லி வந்து 4ம் திகதி சென்னை வந்தடைவார் எனவும் தகவல் தரப்பட்டது.

இது இவ்வாறு இருக்க. சத்துணவுத் திட்ட அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ள திரு. எஸ் திருநாவுக்கரசுவை நியுயோர்க வர வேண்டாமென திரு எம் ஜி. ஆர். பாரத கவுன்ஸிலர் மூலம் தமிழகத் தலைமைச் செயலர் திரு கே சொக்கலிங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள செய்தி ஒன்றில் கூறியிருக்கிறார். தான் சென்னை வருபவரை காத்திருக்குமாறு அவர் திரு திருநாவுக்கரசுவுக்கு இச்செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

தனது மூன்று இலாகாக்கள் நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியனால் பெறப்பட்டதையடுத்து உண்டான கருத்து வேறுபாட்டால் திரு. திருநாவுக்கரசு தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். தனது நிலை குறித்து பிரதமருக்கும். வெளிவிவகாரத் திட்டமிடல் செயலாளர் திரு ஜி. பார்த்தசாரதியிடமும் தெரிவிக்கும் பொருட்டு அவர் தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கிறார்.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10 30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷனா. ராதா,
தங்கவேலு நடித்த
A V. M. இன்
தூங்காதே தம்பி
தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

## ராஜீவின் முதல் வெளிநாட்டுவிஜயம் மே மாதத்தில் ரஷ்யாவுக்கு!

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் முதலாவது வெளிநாட்டு விஜயமாக மே மாதத்தில் ரஷ்ய பிரயாணம் அமையலாமென்று நேற்று அறிவிக்கப்பட்டது. திரு ராஜீவ் காந்தி ஜூன் மாதப் பிற்பகுதியில் அமெரிக்காவுக்கும், பிரான்ஸுக்கும் விஜயம் செய்வாராயினும், அதற்கு முன்னர் அவர் ரஷ்ய விஜயத்தை மேற்கொள்வார்.'' இந்தியாவின் நெருக்கடி நேரங்களில் ரஷ்யா வழங்கிய ஒத்துழைப்பையும், உதவிகளையும் பாரதம் மறந்து விடாது'' என்று பிரதமர் ராஜீவ்காந்தி தமது தேர்தல் வெற்றிச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# கசிப்பு உற்பத்தியே மீண்டும் முதலிடத்தை வகிக்கின்றது!

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் மீண்டும் கசிப்பு உற்பத்தி விற்பனை தோன்றியுள்ளதாகப் புகார்கள் கிடைத்துவருகின்றன. கடந்த வருடம் கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கான துரித நடவடிக்கைகள் கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவினால் கசிப்பு ஒழிப்புச் சம்பந்தமான மகாநாடொன்றும் யாழ் செயலகத்தில் நடாத்தப்பட்டுச் சகல உதவி அரசாங்க அதிபர்களும் தத்தமது பிரிவுகளில் கசிப்பு உற்பத்தி, விற்பனைகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பணிக்கப்பட்டிருந்தனர். அறவழிப் போராட்டக்குழு, மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களும் இணைந்து கிராமந்தோறும் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சில தீவிரவாத இளைஞர் இயக்கங்களும் கசிப்பு உற்பத்தியாளர்களையும், விற்பனையாளர்களையும் எச்சரித்துப் பிரசுரங்களை வெளியிட்டதுடன், கசிப்பு உற்பத்தியாளர்களை கண்டுபிடித்துத் தண்டனைகளையும் வழங்கிவந்தன. இதனையடுத்து இம்மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது மீண்டும் 'கசிப்பு' தலைகாட்டத் தொடங்கியுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

குடாநாட்டின உற்பத்திப் பொருட்களில் கசிப்புத்தான் இப்போது முதலிடத்தை வகித்து வருவதாகவும் தெரியவருகின்றது.

## கோப்பாய், பருத்தித்துறை நியமனம் பெப்ரவரி 11ல்

கோப்பாய், பருத்தித்துறை தேர்தல் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நியமனப் பத்திரங்கள் அடுத்தமாதம் பதினொராம் திகதி எற்கப்படுமென நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இவை ஏற்கப்படுமென ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் கூறுகின்றது.

இதற்கிடையே முன்னர் அறிவிக்கப்பட்ட படி திருகோணமலை பட்டிருப்புத் தொகுதிகளுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 31ம் திகதி ஏற்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### உடனடியாக நாடு கடத்தப்பட்டார் :

## இந்தியாவில் உளவு பார்த்த பிரான்ஸ் ராஜதந்திரி!

பிரான்ஸ் அரசு தனது இந்திய ராஜதந்திரிகளில் ஒருவரை ஆலோசனைக்காக திருப்பி அழைத்துள்ளது. பிரதான பதவியாளர்கள் ஏழுபேர் கைது செய்யப்பட்ட உளவு நடவடிக்கையில் இவரும் சம்பந்தப்பட்டுள்ளார் என்ற பத்திரிகைச் செய்திகள் குறித்து பிரான்சிய அரசு எதனையும் கூற மறுத்துவிட்டது.

இதேவேளை ராஜதந்திரி ஒருவர் பொலிசினது காவலுடன் விமானநிலையம் கொண்டு வரப்பட்டு நாடுகடத்தப்பட்டதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நேற்றுத் தெரிவித்தது.

இந்தச் செய்திகளுக்கு விளக்கமாகவே பிரான்சிய அரசின் அறிக்கை அமைகிறதென்றும் அதிகாரியின் உளவு நடவடிக்கை சம்பந்தம் நேரடியாக மறுக்கப்படாவிட்டாலும் பிரான்சிய அரசுக்கு இதில் சம்பந்தமில்லையென்பது அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

அதேவேளையில் பிரதமர் ராஜீவ்காந்தி தமது பிரதான செயலாளர் திரு. பி.சி. அலெக்ஸாண்டரின் ராஜிநாமாவை மனவேதனையுடன் ஏற்றுக்கொண்டதாகவும் ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

### பாரத கடலில் அத்துமீறினால்...

(பம்பாய்)

பாரதம் தனது கடல் எல்லைக்குள் அத்துமீறிவருவோர், கள்ளக்கடத்தல் புரிவோர் ஆகியோரைக் கண்டுபிடிக்கும் பொருட்டு மேலும் அதிக சக்திவாய்ந்த ரோந்துக்கப்பல்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள், வழிமறிக்கும் நவீன படகுகள் ஆகியவற்றை வாங்கவுள்ளது என்று பம்பாயில் நேற்று உயர் அரசு அதிகாரி ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.

### யாழ்தேவி...

— 1ம் பக்கத் தொடர்

முற்றாகச் சேதமடைந்தன. ரயில்பாதையும் மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இராணுவ வீரர்கள் தமது ஜனவரிச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் விபத்தில் சிக்கியதாக அரசாங்க செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து நடைபெற்ற இடம் சேறும் சகதியுமாக இருப்பதால் வீதி வழியாக அவ்விடத்துக்குச் செல்வது கஷ்டமாக இருக்கிறது. இதனால் புகையிரத பாதைவழியாகவே அதிகாரிகள் ஸ்தலத்துக்குச் சென்றனர்.

### வெளிநாட்டுப்...

— 1ம் பக்கத் தொடர்

மாகும் என பந்கோபஸ்து அமைச்சர் லலித் கூறினார்

மாத்தளை மாவட்டத்தின் பல கிராமங்களைப் பார்வையிட்டு உரையாற்றிய அமைச்சர் எந்த அச்சுறுத்தலின் மத்தியிலும் அரசு வடபகுதி மக்களின்தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலிருந்து மாறுபடாதென்றும் இதுதமிழ் மக்களுக்கெதிரான பேரராட்டமல்ல வென்றுங் கூறினர்.

### வாசகர் நலன் கருதி

## யாழ். நூலகம் 3 கிளைகளாக பிரிந்து இயங்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வாசகர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு உண்டாகியுள்ள போக்குவரத்து வசதிக் குறைவுகளைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் பொது நூலகம் மூன்று கிளைகளாகச் செயற்படவுள்ளது. இந்நிலை மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படும்.

நூலகக் குழுவின் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். மாநகராட்சி ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது இக்கூட்டத்தில் இந்த ஆலோசனையை ஆணையாளரே வெளியிட்டார்.

இத் தீர்மானம் செயலுருப் பெறும் பொருட்டு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண பிதா. பிரான்ஸிஸ் யோசப் தலைமையில் ஐவர் கொண்ட உப-குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது

அரியாலை - சுண்டுக்குளி. நல்லூர், வண்ணார்பண்ணை ஆகிய மூன்று பகுதிகளில் மேற்படி கிளைகள் மூன்றும் அமைக்கப்படவுள்ளன. பொதுவான நன்மை கருதி இப்பகுதிகளில் பொருத்தமான இடங்களை வாடகைக்குத் தரக்கூடியவர்கள் ஆணையாளர் திரு. சிவஞானத்துடன் விரைந்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### கிளிநொச்சி...

1-ம் பக்கத் தொடர்ச்சி

நேற்றுப்பிற்பகல் யாழ்ப்பாணம கிளிநொச்சிப் பாதையிலான சில பஸ்கள் இந்தப் பாதை வழியாகப் பரீட்சார்த்தமாக ஓடவிடப்பட்டன. கொழும்பிலிருந்து வந்து கிளிநொச்சியில் தரித்து நின்ற பல தனியார் லொறிகளும் இப்பாதை வழியாக நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, வவுனியாவுக்கான பஸ் சேவைகள் இன்று முதல் வழக்கம்போல சேவையில் ஈடுபடுத்தப்படுமென வடபிரதேச போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் நேற்றிரவு தெரிவித்தார்.

### பூஸா முகாமி..

— 1ம பக்கத் தொடர்

மூலம் இவர்கள் கொண்டு வரப்பட்டு தத்தமது வீடுகளில் இறக்கப்பட்டனர்.

விடுதலை பெற்ற இளைஞர்களின் பெயர் விபரம் வருமாறு:

கந்தசாமி அசோககுமார்-மாதகல, சின்னராசா அன்ரன் பெனடிக்ற்-ஆனைக்கோட்டை, ஜேக்கப அலபேட் - ஆனைக்கோட்டை, அந்தோனிப்பிள்ளை எட்வின் உதயன் (பபி) ஆனைக்கோட்டை, கிறிஸ்தோபர் கருணேந்திரன்-வட்டுக்கோட்டை (கோப்பாய்), வேலாயுதன் பாராளன-கைதடி, ஆறுமுகம் இராமலிங்கம்-சங்கானை, சூசைபபிள்ளை ரமேஷ்-ஆனைக்கோட்டை' சீனியவரவச்சந்திரன்-கைதடி, நடேசன ரகுநாதன (அபபன)-உரும்பராய், சின்னத்தம்பி பூபாலசிங்கம் - கைதடி, புண்ணியமூர்த்தி சுரேசன-பண்டத்தரிப்பு, ராஜா சிறீஸ்கந்தராஜா-தெலலிபபளை, தியாகராஜா சுந்தரேசன-சங்கானை, கந்தசாமி சிவபாலகிருஷ்ணன்-மாதகல், அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் தங்கராஜா - முல்லைத்தீவு (ஆனைக்கோட்டை) செலவன யோகரத்தினம்-கைதடி, தவரத்தினம் தவபாலச்சந்திரன் - கொக்குவில், தயபையா தேவராஜா - புங்குடுதீவு, பரமநாதன் விக்னராஜா- வண்ணார்பண்ணை கிருஷ்ணர் மகிந்தராஜா - சுழிபுரம், சுப்பிரமணியம செல்வரத்தினம்-வயாவிளான், மார்க்கண்டு கதிர் வேலாயுதம்-தொண்டமானாறு, கணேசரத்தினம் மகேந்திரராஜா-கொக்குவில், நாகலிங்கம் ஸ்ரீதரன்-(கொழும்பில் விடப்பட்டார்)

### 'கை' மாறும்...

—1-ம் பக்கத் தொடர்

கும் கண்டவர் கைக்கடிகாரங்களை தமது உடைமையாக்கிக் கொள்கின்றனராம்.

இலுப்பையடிச் சந்தியில் மினிவான் சாரதியின் 1500 ரூபா பெறுமதிமிக்க கைக்கடிகாரம் இவ்விதம் துப்பாக்கி முனையில் 'கை' மாறியதாம்.

### சூட்டுக்காயத்துடன்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

சேர்ந்த இராசையா (38) ஆகிய ஐவருமம யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டவர்கள். இவர்களில் இருவருக்கு நேற்று சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

இதற்கிடையே கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த மூன்று பெண்களின் சடலங்கள் சம்பந்தமாக நேற்று விசாரணை நடத்தப்பட்டது.

### மின்கம்பத்தில்...

— 1ம் பக்கத் தொடர்

அழைக்கப்படுபவரது சடலம் காணப்பட்டது இவர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதால் மரணதண்டனை விதிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

### சிங்களவர்...

— 1ம் பக்கத் தொடர்

[illegible] என்றும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உறுதியளித்திருந்தார். 1983 நவம்பரில் புதுடில்லியில் சர்வகட்சி மாநாட்டு ஆலோசனையின் போதும் இந்நிலையை ஜனாதிபதி ஒப்புக்கொண்டிருந்தார்'' என்றும் கூறிய திரு அமிர்தலிங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் இவ்வாறான குடியேற்றங்கள் நடத்துவதால் ஏற்படும பிரச்சினைகளுக்கு டொலர், கென் பண்ணை விவகாரங்கள் நல்ல உதாரணமென்றும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### யோண் பிலிப்

யோண் பிலிப் (மேஸ்திரியார்) 19-1-1985 சனிக்கிழமை காலை காலமானார். இவர் காலஞ்சென்ற லூசியாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜோசெப் (ரேஸ் ஆர்ட் ஸ்ருடியோ) டாக்டர் ஆனந்தம், திரேசம்மா, மார்க்கிரட் (ஆசிரியை புனித மரியாள் வித்தியாசாலை யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற மாட்டின் துரைராசா, ஸ்ரனிஸ்லோஸ், பியற்றிஸ், அநுலா (ஆசிரியை, சென்ற் ரேக் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நல்லம்மா, மனோன்மணி, C. E. குணரட்ணம் (முன்னாள் ஆளணி உத்தியோகத்தர் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை) ஆசீர்வாதம் (முன்னாள் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை) லில்லி, ஸ்ரான்லி ஆனந்தராஜா (விலைமதிப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின மாமனுமாவார் அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு திங்கட்கிழமை (21-1-1985) பிற்பகல் 3 00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஆ ஆனந்தராஜன்
854, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

ஈழமுரசு சாயபானா அட்வர்டைசிங் அ[illegible] ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 21-1-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.